DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC. No. | 136/2023 |
| Prosecution: | அ.சா. |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | வரதராஜ் |
| **Father Name** | ~ | முனுசாமி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of**

**Dt.22.8.2025.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் என்ன வழக்கு தாக்கல் செய்து என தெரியுமா என்றால் தெரியும். எதிரியை எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் 2006 ஆம் ஆண்டு முதல் தெரியும். எதிரியை போன்று பல்வேறு நபர்களுக்கும் நான் வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறேன் என்றால் இல்லை. எங்கு வேலை பார்த்து வருகிறீர்கள் என்றால் ஜிகே குரூப்பின் நங்கநல்லூரில் வசித்து வருகின்ற வேலை பார்த்து வருகிறேன். மேற்படி நிறுவனத்தில் என்ன பொறுப்பில் வேலை பார்க்கிறீர் என்றால் கணக்காளராக வேலை பார்க்கிறேன். என்ன படித்துள்ளீர் என்றால் எம்.காம் படித்துள்ளேன். எனக்கு எவ்வளவு வருமானம் என்றால் ரூபாய் 70 ஆயிரம் மாத சம்பளம் ஆகும். எத்தனை ஆண்டுகளாக மேற்படி நிறுவனத்தில் வேலை

பார்த்து வருகிறீர்கள் என்றால் 2016 ஆம் ஆண்டு முதல் வேலை பார்த்து வருகிறேன்.

மேற்படி நிறுவனத்தில் வேலை பார்ப்பதற்கு முன்பாக என்ன வேலை பார்த்து வந்தீர்கள் என்றால் ஊரப்பாக்கம் ராயல் வெல்டிங் ஒயர்ஸ் என்ற நிறுவனத்தில் கணக்காளராக பணியாற்றி வந்தேன். ராயல் வெல்டிங் ஒயர்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் போது எனக்கு எவ்வளவு மாத சம்பளம் என்றால் ரூபாய் 32 ஆயிரம் ஆகும். தற்போது எவ்வளவு மாத சம்பளம் பெற்று வருகிறீர்கள் என்றால் 73 ஆயிரம் பெற்று வருகிறேன். எதிரிக்கு எந்த காலத்தில் எவ்வளவு தொகை கொடுத்தீர் என்றால் நான் ஊரப்பாக்கத்தில் உள்ள நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த போது 2000, 3000 என தொகை கொடுத்துள்ளேன். அதன்பின்னிட்டு தற்போது வேலை பார்த்து வரும் நிறுவனத்தில் சேர்ந்த பின்னிட்டு எதிரியின் மகன் திருமண செலவிற்காக ரூபாய் மூன்று லட்சம் ரூபாய் 3 லட்சம் ரொக்கமாக கொடுத்துள்ளேன்.

நான் தாக்கல் செய்த புகாரில் எதிரிக்கு குடும்ப செலவிற்காகவும் அவரது மகனின் திருமண செலவிற்காகவும் தொகை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் அவரின் மகன் படிப்பு செலவிற்காகவும் தொகை கொடுத்துள்ளேன். நான் எதிரிக்கு அவரது மகனின் படிப்பு செலவிற்கு எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் எனது புகார் மனுவில் அதனை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மகனுக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 2019 ஆம் ஆண்டு நடைபெற்றது. எந்த வருடம் காசோலை மதிப்பு மறுக்கப்பட்டது தொடர்பாக எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் 2022 ஆம் ஆண்டு அனுப்பினேன். 2019 ஆம் ஆண்டு எதிரியின் மகன் திருமண செலவுக்காக பெற்ற கடன் தொகைக்காக 2019 ஆம் ஆண்டு எதிரி கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி பின்னிட்டு 2022 ஆம் ஆண்டு வசூலுக்காக தாக்கல் செய்து தவறாக இவ்வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் எதிரிக்கு கொடுத்த மா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் ரூபாய் 4,79 ஆயிரத்து 500 எதிரியின் மகன் திருமண செலவிற்காக கொடுத்ததாக கொடுத்ததாகவும் ஆனால் எனது வாக்கு மூலத்தில் திருமண சாலைவிற்காக மூன்று லட்சம் கொடுத்துள்ளதாக முரண்பாடாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல

எதிரியின் மகன் திருமண செல்வதற்கு மூன்று லட்சம் கொடுத்தேன் மற்றும் குடும்ப செலவிற்காக இதர தொகை கொடுத்ததை சேர்த்து மொத்த தொகையாக ரூபாய் 4 லட்சத்து 79 ஆயிரத்து 500 என குறிப்பிட்டுள்ளேன். நான் எதிரியின் மகன் திருமணத்திற்கு 3 லட்சம் மட்டும் கொடுத்தேன் என்றாலும் அத்தகைக்கு வட்டி மற்றும் இதர செலவினங்களை சேர்த்து ரூபாய் 4 லட்சத்தி 79 ஆயிரத்து 500 நிலுவைத் தொகை உள்ளதாக தவறாக குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல.

நான் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு எதிரி அனுப்பிய பதிலறிவிப்பின் விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். 17.12.2018 முதல் 19 3 2020 வரை எதிரி என்னிடம் அவர் பெற்ற கடன் தொகைக்கு கடன் தொகையை பல்வேறு தவணைகளில் ரொக்கமாக என்னிடம் திருப்பி செலுத்தி உள்ளார் என்றால் இல்லை அவர் ரொக்கமாக கொடுக்கவில்லை காசோலையாக என்னிடம் கடன் தொகையை திருப்பி செலுத்தி உள்ளார். ரூபாய் ஒரு லட்சத்து 30 ஆயிரத்திற்கு காசோலை மூலமாக தொகை திருப்பி செலுத்தி உள்ளார். நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி எனக்கு திருப்பி செலுத்திய ஒரு லட்சத்து 30 ஆயிரம் தொகை பற்றி குறிப்பிட்டுள்ளீரா என்றால் நான் அதனை குறிப்பிட்டு தான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் எனக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை 96 ஆயிரம் மட்டும் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

ஆனால் அது தவறான கணக்கீடாகும். எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 03.8.2022 தேதியிட்ட வழக்கறிஞர் பதில் அறிவிப்பு எதிரி அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான் 3.8.2022 தேதியிட்ட பதில் அறிவிப்பு எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி என்னிடமிருந்து அவரது மகன் திருமண செலவிற்காக ரூபாய் மூன்று லட்சம் கடன் பெற்றிருந்தார் என்றாலும் அந்த கடன் தொகையில் நான் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள ஒரு லட்சத்து 30 ஆயிரம் தொகை மற்றும் பல்வேறு தவணைகளில் தொகைகளை திருப்பி செலுத்தியதில் எனக்கு ரூபாய் 96,000

மட்டுமே திருப்பி செலுத்தி கடமைப்பட்டுள்ளார் என்றாலும் ஆனால் 2019 ஆம் ஆண்டு செக்யூரிட்டிக்காக எதிரி என்னிடம் கொடுத்த காசோலையை தவறாக 2022 ஆம் ஆண்டு வசூலுக்காக தாக்கல் செய்து எதிரியை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இவ் வழக்கு கடன் தொகை சம்பந்தமாக நான் எதிரிடமிருந்து 22 நிரப்பப்படாத காசோலைகளை பெற்றுள்ளேன் என்றால் இல்லை. ஏ பி சி பைனான்ஸ் நிறுவனம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு கடன் கொடுக்கும்போது அத்தொகையை ஏபிசி பைனான்ஸ் நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொடுப்பதாக சொல்லி நான் கடன் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல அந்த நிறுவனம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த நிறுவனத்துடன் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ.1 ஆவணத்தில் ஒட்டப்பட்டுள்ள வருவாய் முத்திரை வில்லையில் எதிரியின் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. எதிரிக்கு கடன் கொடுக்கும்போது வெற்றுத்தாள் மற்றும் 22 காசோலைகளில் கையொப்பம் பெற்று விட்டு ம.சா.ஆ.1 ஆவணத்தில் தவறான சங்கதிகள் நிரப்பி இவ் வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரியுடன் 2018 முதல் 2020 வரையில் பண பரிவர்த்தனை நடைபெற்றதாக நான் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அவ்வாறு 2020 ஆம் ஆண்டு வரையில் பண பரிவர்த்தனை நடைபெற்ற காலத்தில் கொடுக்கப்பட்ட காசோலை தான் 2022 ஆம் ஆண்டு தாக்கல் செய்து இவ்வழக்கத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கொரோனா காலம் என்பதால் எதிரி அக்காலத்தில் காசோலை கொடுக்கவில்லை அதன் பின்னர் தான் கொடுத்தார் அதனை தான் நான் வசூலுக்காக தாக்கல் செய்தேன். எதிரிக்கு கடன் கொடுக்கும் போது வழக்கு காசோலை பெற்றுக் கொண்டுதான் கடன் கொடுத்தேன் என்றாலும் ஆனால் தற்போது வழக்கிற்காக கொரோனா காலத்திற்கு பின்னிட்டு காசோலை பெற்றுக் கொண்டதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் எதிரிக்கு பல்வேறு தவணைகளில் தொகை கொடுத்துள்ளேன் என்றாலும் மொத்தமாக ரூபாய் 3 லட்சம் வங்கி பரிவர்த்தனை மூலம் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.1

ஆவணத்தில் உள்ள வருவாய் முத்திரை வில்லை மீது எதிரியின் கையொப்பம் இல்லை என்றாலும் எதிரிக்கு மொத்தமாக ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல நான் பல்வேறு தவணைகளில் எதிரிக்கு தொகை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பெற்ற கடன் தொகை ரூபாய் மூன்று லட்சத்தில் பல்வேறு தவணைகளில் ரொக்கமாகவும் ஜி பே பரிவர்த்தனை மூலமாகவும் ரூபாய் 2 லட்சத்து 4 ஆயிரத்தை திருப்பி செலுத்தி விட்டார் என்றாலும் எதிரி எனக்கு திருப்பி செலுத்த வேண்டிய தொகை 96 ஆயிரம் மட்டுமே என்றால் சரியல்ல.

எதிரியுடன் ஏற்பட்ட பண பரிவர்த்தனை காலத்தை தவறாக குறிப்பிட்டு மேற்படி காசோலையை தவறாக பூர்த்தி செய்து அதனை வசூலுக்காக தாக்கல் செய்து பின்னிட்டு தவறான சங்கதிகள் குறிப்பிட்டு எதிரியை மன உளைச்சல் ஏற்படுத்துவதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.